# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 23 புதன்கிழமை (08-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:279


# கூட்டணி மட்டக்களப்பு எம்.பி. நிமலன் வீதியில் சுட்டுக் கொலை!

## மோட்டார் சைக்கிளில் சென்ற ஆயுதபாணிகளின் கைவரிசை

- உதயன் மட்டக்களப்புச் செய்தியாளர் இரா.துரைரத்தினம் -

மட்டக்களப்பு,நவம்பர் 8

**தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த, மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரான அஸ்லி நிமலன் சௌந்தரநாயகம் (45 வயது) நேற்று மாலை வீதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.**

**மோட்டார் சைக்கிளில் இன்னொருவருடன் சென்ற நாடாளுமன்ற உறுப் பினரைப் பின்தொடர்ந்து மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதபாணி களே இப்படுகொலையைச் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.**

**மட்டக்களப்பிலிருந்து மொறக்கொட்டாஞ்சேனையிலுள்ள அவரது வீட்டுக் குத் திரும்பிக் கொண்டிருந்த வேளை, மாலை சுமார் 6 மணியளவில் கிரான் சந்தியடியில் இந்தச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றது.**

மட்டக்களப்பு - வாழைச்சேனைப் பிரதான வீதியில் நாடாளுமன்ற உறுப்பினர் நிமலன், தமது ஆதர வாளர் எஸ்.ஜெயானந்தமுடன் மோட் டார் சைக்கிளில் சென்று கொண் டிருந்தார்.

பின்னால் மோட்டார் சைக்கிளில் ஆயுதபாணிகளாக வந்த இருவர், நிமலனின் மோட்டார் சைக்கிளை முந்திக்கொண்டு சென்று சரமாரியா கச் சுட்டனர்.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல் லாத பகுதியில் இந்தச் சம்பவம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் பாதுகாப்பை ஏற்க மறுத்திருந்தார்

மட்டக்களப்பு,நவ.8

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற நிமலன் சௌந்தரநாயகம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பொலீஸ் பாது காப்பை ஏற்க மறுத்து மெய்ப்பாதுகாப்பாளர்கள் இன்றி நடமாடிவந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு இவர் 16 ஆயிரத்து 542 விருப்பு வாக்குகளைப் பெற்று முதன்மை நாடாளுமன்ற உறுப்பினரானார். மொறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த இவர் வாழைச்சேனை புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிப ராகப் பணியாற்றினார். தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தனது பதவியை இவர் ராஜினாமாச் செய்திருந்தார்.

நேற்றுமுன்தினம் தனது 46ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய இவர் சமூக சேவையில் நாட்டம் கொண்டவர்.

* தமிழ் இளைஞர் பேரவையில் தீவிரமாக இயங்கி வந்தார்.

இவரது இறுதிக் கிரியைகள் நாளை மொறக்கொட்டாஞ்சேனையில் இடம்பெற இருக்கின்றன. (இ-21-3)

## செல்வராசா எம்.பி. ஆகிறார்

மட்டக்களப்பு,நவ.8

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர் நிம லன் சௌந்தரநாயகம் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து பொன். செல்வராசா உறுப்பினராகப் பதவி யேற்க இருக்கின்றார்.

வேட்பாளர் பட்டியலில் அடுத்த நிலையில் பொன்.செல்வராசா இருப் பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மட்டக்களப்பில் துக்க தினம்

மட்டக்களப்பு,நவ.8

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தர நாயகத்தின் படுகொலையைக் கண்டித்து இன்று துக்கதினம் அனுஷ்டிக்க ஏற்பாடாகியுள்ளது.

சம்பவத்தைக் கேள்விப்பட்ட உடனேயே கல்குடாத் தொகுதியில் வெள் ளைக் கொடிகள் கட்டப்பட்டன; கடைகள் இழுத்து மூடப்பட்டன.

சில பகுதிகளில் பதற்ற நிலை காணப்பட்டது.

இன்றும் நாளையும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையினர் துக்க தினத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். (இ-21-3)

## கூட்டணித் தலைவர்கள் மட்டக்களப்பு புறப்பாடு

### செயற்குழுக் கூட்டம் ரத்து

கொழும்பு,நவ.8

படுகொலை செய்யப்பட்ட நாடாளு மன்ற உறுப்பினர் நிமலன் சௌந் தரநாயகத்தின் இறுதிக்கிரியைக ளில் பங்குபற்றுவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள் இன்று அங்கு செல்ல விருக்கின்றனர்.

இந்தப் படுகொலையை அடுத்து, எதிர்வரும் 11ஆம் திகதி இடம்பெற விருந்த கூட்டணியின் செயற் குழுக் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கூட்டணியின் யாழ்.அலுவலகத் தில் கூட்டணிக் கொடி அரைக்கம்பத் தில பறக்கவிடப்பட்டுள்ளதுடன் அனுதாபம் தெரிவிக்கும் புத்தகமும் வைக்கப்பட்டுள்ளது. (இ-3)

## மட்டுவில் பகுதியில் மோதல்!

கொழும்பு,நவ.8

மட்டுவில் பகுதியில் நேற்றுமுன் தினம் காலை 9.40 மணியளவில் படையினருக்கும் விடுதலைப்புலிக ளுக்கும் இடையில் மோதல் இடம் பெற்றதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்த மோதலில் ஆகக் குறைந் தது நான்கு விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் என்றும் -

சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என்றும் - அது மேலும் தெரிவித் தது. (இ-3)

## யாழ். கடலேரிப் பகுதியில் மீன்பிடித் தடை நீக்கம்!

கொழும்பு,நவ:8

யாழ்.கடலேரியில் மீன்பிடிப்பதற்கு கடந்த வெள்ளிக்கிழமை விதிக்கப் பட்ட தடை நேற்று நீக்கப்பட்டுவிட்ட தாகப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக் கைத் தலைமையகம் நேற்று பிற்பக லில் அறிவித்துள்ளது.

கொழும்புத்துறைப் பகுதியின் பாதுகாப்பு ஏற்பாட்டுக்காக இந்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது என்று அது மேலும் தெரிவித்தது.

அதே நேரம் - நேற்றுக் காலை 10 மணியளவில் கொழும்புத்துறை யில் இருந்து சென்ற ஏழு மீன்பிடி வள்ளங்கள் விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் மீன்பிடிப்பதை ரோந்து சென்ற கடற்படையினர் அவதானித்து அந்த வள்ளங்களில் இருந்த 50மீன வர்களைக் கைதுசெய்தனர் என்றும் -

பின்னர் அவர்கள் இராணுவத்தி னரிடம் ஒப்படைக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் -

இந்த மீனவர்கள் கொழும்புத் துறை மீனவர் சங்கத்திடம் இன்று ஒப்படைக்கப்படவிருக்கின்றனர் என் றும் - பாதுகாப்பு அமைச்சு நடவடிக் கைத் தலைமையகம் அறிவித்துள் ளது. (இ-3-6-10-51)

## ஈரோஸ் அமைப்பின் முன்னாள் உறுப்பினரும் சுட்டுக் கொலை!

### குறுகிய நேரத்தில் மட்டக்களப்பில் இரண்டாவது சம்பவம்

மட்டக்களப்பு,நவ.8

மட்டக்களப்பின் புறநகர்ப் பகுதி யான திருப்பெருந்துறையில் வைத்து நேற்று இரவு 8.15 மணியளவில் ஈரோஸ் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கிட்டு என அழைக்கப்படும் நமசி வாயம் சிவானந்தன் (வயது 29) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவரா வார்.

ஆறு வருடங்களுக்கு முன்பே ஈரோஸ் அமைப்பைவிட்டு விலகிய இவர் கார்ச் சாரதிகளைப் பயிற்றும் பயிற்றுநராகக் கடமையாற்றி வந் தார் எனவும் -

நேற்று மாலை மட்டக்களப்பு நகருக்கு மோட்டார் சைக்கிளில் வந்துவிட்டு வீடு நோக்கிச் சென்ற வேளை - வீட்டின் முன்புற வாச

(10ஆம் பக்கம் பார்க்க)

## இன்னும் பத்து நாள்களுக்குள் கொழும்பு.~ பலாலி விமான சேவை

### இராணுவப் பேச்சாளர் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.8

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான பொதுமக்களுக்கான பயணிகள் விமானசேவை இன்னும் பத்து நாள்களுக்குள் ஆரம்பிக்கப் பட்டுவிடும்.

பயணிகள் விமானச் சேவையில் ஈடுபடுத்தப்படும் பொருட்டு வெளி நாட்டில் இருந்து இரண்டு ஏ.என்.32 ரக விமானங்கள் வாடகைக்கு அமர்த் தப்படவுள்ளன.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடி யர் சனத் கருணாரத்னா நேற்றிரவு இத்தகவலை உதயனுக்குத் தெரி வித்தார்.

பலாலி - இரத்மலானை பயணி கள் விமான சேவை மீண்டும் ஆரம் பிக்கப்படும் என்ற செய்தியை உத யன் நேற்று பிரத்தியேகமாக வெளி யிட்டிருந்தது தெரிந்ததே.

அச் செய்தியை ஊர்ஜிதம் செய்து இராணுவப் பேச்சாளர் மேலதிக தக வல்களைத் தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(07-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்க ளின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்று வரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ.411,346**

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

நாகம்ஸ் சுன்னாகம்
அஜித் (இரு வேடம்),
சிம்ரன், விவேக் நடித்த
வாலி
(ரீல்ஸ்) காட்சிகள்- 11.00, 2.30 (பு.நே.
(C/13072)

## வன்னியில் மண்ணெண்ணெய்க்கு விலை நிர்ணயம்

வவுனியா,நவ.8

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் மண்எண்ணெய்க்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்"முதல் ஒரு லீற்றர் மண்எண்ணெய் 120 ரூபாவாக விற்கப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விலை நிர்ணயத்தை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்த்துறை எச்சரித்துள்ளது. (ஐ-3-7)

லஷ்மி சினிமா
இணுவில்
விஜய், ரம்பா
நடித்த
மின்சாரக் கண்ணா
(ரீல்ஸ்)
3ஆவது வாரம் சனத்திரள்
காட்சி:10.30,2.30 (ப.நே)
(80305)

SUNIL ARTS
சுனில் ஆட்ஸ்
30-10-2000 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்கள் பெற்றுக்கொள்ளலாம்.
14.11.2000 அன்று படச்சுருள்கள் COLOMBOக்கு அனுப்பப்படும்.
272, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/13739)

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



எம்முடன் 06 - 10 - 1961

இறைவன் அடியில் 24 - 09 - 2000

நாரந்தனை கிழக்கைப் பிறப்பிடமாகவும்
கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## வீரசிங்கம் உதயகுமார் (B.Sc.)

(ஆசிரியர், யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகவும் வழிகாட்டியாகவும் இருந்து அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த எமது குடும்பத தலைவனான அப்பாவின் திடீர் மறைவின் போது நேரில் வந்தும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும், வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலம் எமது துயரில் பங்கெடுத்தோருக்கும் பிரான்சிலும், லண்டனிலும், கொழும்பிலும் எமது சகோதரர்களுடன் துக்க நிகழ்வில் பங்கெடுத்தோருக்கும், துயரத்தில் பங்குகொண்டோருக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் பத்திரிகை வாயிலாகவும் அஞ்சலி பிரசுரங்கள் மூலமும் அஞ்சலிகளை வெளியிட்ட யா/புனித அந்தோனியார் கல்லூரி, யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புப் பிரிவினர், யாழ்/கோப்பாய் மகா வித்தியாலயம், யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (வர்த்தகநெறி 2ஆம் வருடம்), யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த உறவினர்கள், நண்பர்களுக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்கேற்று நடத்திய கல்வியங்காடு சாயி சமித்தியினருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (08.11.2000) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி,
பிள்ளைகள்:- ஹேமபிஷா, சாகித்தியன்.

*374, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*
(சந்தை அருகில் கல்வியங்காடு) (80298)

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திபுஸ்ரீ நிகழும் விக்கிரம வருஷம் (நாளை) ஐப்பசி மாதம் 24ஆம் திகதி (09-11-2000) வியாழக்கிழமை பகல் 9.48 மணிக்குமேல் 11.24 மணிக்குள் (புதிய நேரம்) வரும் தனு லக்கினமும் ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுப முகூர்த்தத்தில்.

சக்கலாவத்தை இரங்கசாமிக்குருக்கள்
அவர்களின் பௌத்திரியும்
பிரம்மஸ்ரீ இ.ராதாகிருஸ்ணசர்மா
அவர்களின்
கனிஷ்ட புத்திரி சௌபாக்கியவதி
**சீதாலக்ஸ்மியை** (சீதா)



சரசாலை பரமசாமிஜயர்
அவர்களின் பௌத்திரனும்
பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்தசர்மா
அவர்களின்
கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி
**மதுசூதனசர்மாவுக்கு** (மது)

கன்னிகாதான பாணிக்கிரஹண திருமாங்கல்ய தாரணம் செய்து கொடுப்பதாக பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்ற முகூர்த்தத்தில் நவிண்டில் சக்கலாவத்தை ஞானவயிரவர் கோயிலடியில் அமைந்துள்ள மணமகள் இல்லத்தில் நடைபெற இருப்பதால் தங்கள் பந்துமித்திர சகிதம் வந்து தம்பதிகளை ஆசீர்வதித்து சபையைச் சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**சமாவர்த்தனம்:** 09-11-2000 அன்று காலை 5.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

*இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்*

**ஸ்ரீ ஸ்ரீமதி இ.ராதாகிருஸ்ணசர்மா,**
வல்லபாம்பாள் தம்பதிகள்
நவிண்டில்,
சக்கலாவத்தை.

**ஸ்ரீ ஸ்ரீமதி ப.சோமாஸ்கந்தசர்மா,**
கிரிஜாதேவி தம்பதிகள்
வியாபாரிமூலை,
வீரபத்திரர் கோயிலடி,
பருத்தித்துறை (தற்காலிக விலாசம்)

இருவீட்டார் அழைப்பு

(C/13736)

வதூவரகிரகப் பிரவேசம் (நாளை) 09-11-2000 மாலை 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.
வரவேற்பு: 11-11-2000 அன்றுமாலை 4.00 மணிக்கு மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந், ரம்பா,
மணிவண்ணன், ராதிகா
மற்றும் பலர் நடிப்பில்
பூமகள் ஊர்வலம்
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே)
(C/13648)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி கனகசபை செல்லாச்சிப்பிள்ளை

(பங்கஜம்)

தோற்றம் 24-11-1933 — மறைவு 09-10-2000

09-10-2000 திங்கட்கிழமை அன்று காலமான எங்கள் குடும்பத் தலைவி திருமதி கனகசபை செல்லாச்சிப்பிள்ளை அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (08-11-2000) எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் கலந்து மதிய போசனத்திலும் பங்குபற்றி சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

வைத்தியவசதிகள் புரிந்த சங்கானை அரசினர் வைத்தியசாலை வைத்தியர்களுக்கும் சக ஊழியர்களுக்கும் தொலைபேசி மூலமும் தபால் தந்தி மூலமும் அனுதாபச் செய்தி அறிவித்த ஏனையோருக்கும் நேரடியாகச் சமுகம் கொடுத்தோருக்கும் மற்றும் உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எங்கள் நன்றியறிதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்

நிரந்தர முகவரி:
*பூதர்வளவு, அச்செழு,*
*நீர்வேலி.*

தற்காலிக முகவரி:
**சீ.தனஞ்சயன்**
*(வெள்ளைத்தம்பி)*
*சிலம்புப்புளியடி, சங்கானை.*

(80297)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் ஐப்பசித் திங்கள் 23ஆம் நாள் இன்று(8-11-2000) புதன்கிழமை காலை 10 மணிமுதல் 12 மணிவரையுள்ள வளர்பிறை உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும், தனுலக்கினமும் கூடிய சுபவேளையில்

மயிலணியைச் சேர்ந்த
சிவராமலிங்ககுருக்கள்
பௌத்திரியும்
ஜெகன்நாதக்குருக்கள்
புத்திரியுமாகிய
**வதனியை**



அளவெட்டியைச் சேர்ந்த
பரமசாமிக்குருக்களின்
பௌத்திரனும்
சிவராமலிங்கக்குருக்களின்
கனிஷ்ட புத்திரனுமாகிய
**இந்திரராஜசர்மா**
அவர்களுக்கு

கன்னிகாதானம் திருமாங்கல்யதாரணம் பாணிக்கிரஹணம் செய்ய மயிலணி ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமானின் கிருபையும் வவுனியா உக்கிளாங்குளம் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் கிருபையும், ஸ்ரீ காஞ்சிப் பெரியாரின் அருளாசியுடனும் மணமகள் இல்லத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்:- இன்று (08-11-2000) காலை 7 மணிக்கு மணமகன் இல்லத்தில்.
(பவித்ரா இல்லம் கூழாங்குளம், வவுனியா)

*தங்கள் நல்வரவை நாடும்*

திருமதி
**மீனாட்சி ஜெகன்நாதக்குருக்கள்**
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்
உக்கிளாங்குளம், வவுனியா.

திருமதி
**சாவித்திரி சிவராமலிங்ககுருக்கள்**
பெருமாக்கடவை,
அளவெட்டி.

*இருவீட்டார் அழைப்பு*

(80281)

# போரைத் தளர்த்தினால் அது புலிகளுக்கு வாய்ப்பாகிவிடும்

## இந்தியப் பத்திரிகைக்கு பலகல்ல பேட்டி

கொழும்பு,நவ.8

"விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் தளர்வுப் போக்கு எதுவும் காண்பிக்கப்பட்டால், அது அவர்கள் மீள அணிதிரண்டு படையினருக்கு எதிராகப் பாரிய தாக்குதலைத் தொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்திவிடும்" - என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

"ரைம்ஸ் ஒவ் இந்தியா" பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இராணுவத தளபதி தமது பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் படையினர் வெற்றிகளைப் பெற்று வருகின்றனர். அத்தகைய நிலையில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளில் தளர்வு நிலை ஏதும் காண்பிக்கப்பட்டால், அது அவர்கள் மீள அணிதிரண்டு தாக்குதல் நடத்தும் வாய்ப்பை ஏற்படுத்திவிடும்.

பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பாக யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்பட வேண்டும் எனப் புலிகள் கோரியிருப்பதானது. அவர்களது நோக்கத்தில் பெரும் சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது. கடந்த காலங்களில் இந்த விடயத்தில் புலிகளுடன் எமக்குக் கசப்பான அனுபவங்களே ஏற்பட்டுள்ளன. அவர்கள் தங்களது வார்த்தைகளுக்கு மதிப்பளிக்கவில்லை - என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை-

அவர் அளித்துள்ள மற்றொரு பேட்டியில் தமிழர்களின் பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வு காணப்படவேண்டும். புலிகளின் பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காணப்படவேண்டும் - என்று தெரிவித்துள்ளார். (ஐ-3-4)

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

- வடிவேல் கணேசபிள்ளை கோகிலா - 65 மருதடி வீதி, நல்லூர்.
- முத்துலட்சுமி - மே/பா.அமிர்தலிங்கம்,101வாசிகசாலை ஒழுங்கை, கல்வியங்காடு.
- நீலயினார் மனோகரன் - சிவன் கோயிலடி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
- ராமலிங்கம் சரஸ்வதி - சண்முகலிங்கம் சாந்தி - 384, நாவலர் வீதி, அரியாலை. (ஐ)

## மலையகத்தில் பரபரப்பு

கொழும்பு,நவ.8

பலாங்கொட தெத்தனகல மலைப் பகுதிக்கு ஆசிரியர்கள் சிலருடன் சென்ற 108 மாணவர்கள் காணமற் போனதாக வெளியான தகவல் நேற்றுமுன்தினம் மலையகப் பகுதியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது.

நேற்று முன்தினம் மலைக்குச் சென்ற இந்த மாணவர்கள் அன்று மாலை வரை வீடு திரும்பாததை அடுத்தே அவர்கள் காணாமற் போய் விட்டதாகத் தகவல் பரவியது.

தேடுதல் நடத்திய பொலீஸார் நேற்றுக் காலை மாணவர்களைக் கண்டு பிடித்துப் பாதுகாப்பாக அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைத்தனர். மாணவர்கள் வீடு திரும்பத் தாமதமானது குறித்து கூடச்சென்ற ஆசிரியர்கள் ஐவரிடமும் விளக்கம் கோரப்படும் என்று பலாங்கொட கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-ரி)

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

**குறிப்பு:-** இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறிய வந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| 06.11.2000 (திங்கட்கிழமை) வரை கிடைத்த நிதி:- | ரூபா |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | - 373,964 |
| 01. மகேஸ்வரி - ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை | - 500 |
| 02. உலகுடைய பிள்ளையார் தேவஸ்தானம், - வல்வெட்டித்துறை | - 250 |
| 03. ராஜா ஸ்ரோர்ஸ் - உரும்பிராய் | - 500 |
| 04. E.K. ஞாபகார்த்தமாக K.ரவி - அரியாலை | - 300 |
| 05. P.ராஜன்மாஸ்ரரும் சக மாணவர்களும் - D.M.A.கராத்தே கழகம் | - 1,750 |
| 06. R.மோகனதாஸ் - புலவனார் வீதி, கல்வியங்காடு | - 1,000 |
| 07 ஓய்வுபெற்ற ஆசிரியை - இணுவில் தெற்கு | - 1,000 |
| 08. ஓர் அன்பர் - அராலி தெற்கு | - 100 |
| 09. சி.பிரதீபன் - உரும்பிராய் கிழக்கு | - 250 |
| 10. ஓர் அன்பர் - கோயில் வீதி, யாழ்ப்பாணம் | - 500 |
| 11. இயந்திர பொறியியல் பீட 2ஆம் வருட மாணவர்கள் - யாழ். தொழில்நுட்பக் கல்லூரி | - 1,000 |
| 12. எஸ்.ஈஸ்வரன் - வல்வெட்டித்துறை | - 300 |
| 13. ஓர் அன்பர் - வல்வெட்டித்துறை | - 500 |
| 14. எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை (ஆசிரியர்) - யாழ். பரி.யோவான் கல்லூரி | - 500 |
| 15. தி.கிருஷ்ணகுமார் - பதில் அஞ்சல் ஊழியர், உபதபாலகம், மாதகல் | - 250 |
| 16. V.மணிவாசகன் - சங்கானை | - 250 |
| 17. க. முத்தையா - சங்கானை | - 250 |
| 18. யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக்கழகம், யாழ்ப்பாணம் | - 2,500 |
| 19. வட மாகாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம் | - 2,001 |
| மொத்தம் | 387,665 |

உ

## முதலாவது ஆண்டின் பிறந்தநாள் வாழ்த்து



'குமரகிரி' கோப்பாய் என்னும் நிரந்தர முகவரியிலுள்ளவர்களான,

**ஸ்ரீசிவாயன் - செல்வராணி**

தம்பதியினரின் அருந்தவப் பேற்றால் அவதரித்துள்ள பிள்ளைகளாகிய

**திருச்செந்தூரன், திருமகள்**

ஆகிய இருவரும் தங்களின் முதலாவது பிறந்த தினத்தை எல்லாம் வல்ல இறைவனின் திருவருளால் 08-11-2000 ஆம் திகதியாகிய இன்று சுன்னாகம் Dr.சுப்பிரமணியம் வீதியிலுள்ள மாமனாராகிய திரு.K.E.குமாரகுலசூரியர் இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்கள்.

ஒரே சூலில் ஒருங்கு பிறந்துள்ளவர்களான இருவரும் இறைவனின் திருவருள் பேற்றால், உடல் நலம்பெற்று, பல கலைகளையும் கற்று, ஏனைய வளங்களையும் பெற்று, நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும், நீடூழிகாலம் நிறைவுடன் வாழ வேண்டி, அன்புக்குரிய பெற்றோர்களும், குடும்பத்தினர்களும் ஏனைய உறவினர்களும் உளமார வாழ்த்தி இறையருள் வேண்டுகின்றார்கள்.

'சமூக இரத்தினம்'
M.K. இளையப்பு
(யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்)
(அம்மப்பா)

'குமரகிரி',
கோப்பாய். (80173)

## முதலாம் ஆண்டு நீங்காத நினைவு



தாய் மடி 17 - 09 - 1943

தெய்வ அடி 20 - 11 - 1999

**அமரர்**
**பொன்னையா செல்வராசா**

திதி: 08.11.2000

காலம் எல்லாம் வாழ்வாயென எண்ணி நாமிருக்க
காலன் கவர்ந்து சென்றதேனோ?
இதயத்தில் வீற்றிருக்கும் உன் நினைவலைகள்
எம்மைவிட்டு என்றும் அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்
மனைவி, பிள்ளைகள்,
பெறாமக்கள், மருமக்கள்.

*விநாயகர் வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*

(C/13725)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் ஐப்பசித் திங்கள் 24 ஆம் நாள் 09.11.2000 வியாழக்கிழமை பகல் 10.58 மணிமுதல் 12.30 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரமும் மகர லக்கினமும் கூடிய சித்த அமிர்த யோக வேளையில்,

| | |
|---|---|
| எமது புத்திரன் | எமது புத்திரி |
| திருநிறைசெல்வன் | திருநிறைசெல்வி |
| **மோகனானந்தன்** (வவா) | **சந்திரகலா** (சந்திரா) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் இரு வீட்டார் சார்பிலும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்புபசாரம்**

| | |
|---|---|
| **மணமகன் இல்லத்தில்** | **மணமகள் இல்லத்தில்** |
| **10.11.2000 வெள்ளிக்கிழமை** | **11.11.2000 சனிக்கிழமை** |
| **நடைபெறும்.** | **நடைபெறும்.** |

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்**

| | |
|---|---|
| **திரு.திருமதி இ.சிவபாக்கியம்** | **திரு.திருமதி ச.நாகராசா (நாகேந்திரம்)** |
| குடும்பம், | குடும்பம், |
| சந்தை வீதி, உடுப்பிட்டி. | பிரதான வீதி, சங்கானை. |

(C/13729)

## தர்மசாஸ்தா குருகுலம்

இன்று (8-11-2000) புதன்கிழமை
காலை 6.30 மணி — சண்டிபாராயணம்
காலை 7.30 மணி — சமாவர்த்தன விவாஹ மந்திரங்கள்
பி. ப. 1.30 மணி — சூக்தங்கள், கணபாடங்கள்.
பி. ப. 3.00 மணி — பாடசாலை மாணவர்கள்.
(சிறுவர்களுக்கு ஆரம்ப வகுப்பு)

சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்
இணுவில் (80285)



## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

இல. 40/40, சீனியர் ஒழுங்கை,
கலட்டி, யாழ்ப்பாணத்தில் வதியும்
பிரம்மஸ்ரீ
சிறீதர சர்மா – புவனேஸ்வரி அம்மா
தம்பதிகளின்
செல்வப் புதல்வி
**சோபிகா**
தனது ஒன்பதாவது பிறந்த நாளையும்
தவப் புதல்வன்
**சிறீரங்கன்**
தனது முதலாவது பிறந்த நாளையும்
இன்று (08-11-2000) புதன்கிழமை
காலை 7.30 மணிக்கு
தமது இல்லத்தில் கொண்டாடுகின்றார்கள்.
இவர்களை அம்மா, அப்பா, அம்மம்மா, தாத்தா, பாட்டி, மாமா குடும்பம், மாமி குடும்பம், மச்சாள்மார், மச்சான்மார், உற்றார், உறவினர், அயலவர், அனைவரும் தீர்க்காயுளுடன் சகல கலைகளையும் பெற்று நீடுழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்; பிரம்மஸ்ரீ சிறீதரசர்மா
(அப்பா)
(80300)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர்
திருமதி ஜெயதேவி சிறிஸ்கந்தராசா
அவர்களின் அன்புத் தந்தையார்
**அமரர் நா. கந்தையா**
அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர், மாணவர்கள்.
யா/நாரந்தனை றோ. க. ம வித்.
நாரந்தனை, ஊர்காவற்றுறை.
(80304)



## அறிவித்தல்

அமரர்
**ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களின்**
பிறந்தநாளை முன்னிட்டு இன்று (08-11-2000) மாலை 3-00 மணிக்கு (பழைய நேரம்) குருநகரில் உள்ள அன்னாரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துமுகமாகப் பொதுமக்கள் மற்றும் கட்சித் தொண்டர்கள் அனைவரையும் சமுகமளிக்கும் வண்ணம் மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். மற்றும் 06-11-2000 உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்சிக் கூட்டத்திற்கு (புதிய நேரம் 1-30 மணி) சமுகம் தரும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

காங்கிரஸ் இல்லம்,
அகில இலங்கை
தமிழ் காங்கிரஸ் தலைமையகம்,
120, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(80303)



## திறப்பு விழா

## ஜெகா மோட்டோர்ஸ்

போட்டோப் பிரதி அடித்தல்
கவர் அடித்தல் — தொலை பேசித் தொடர்பு
காலம்;- இன்று (08-11-2000) புதன்கிழமை
சுபநேரம்:- காலை 8-18 தொடக்கம் 12-00 மணி வரை.
அன்புடன் அழைக்கின்றோம்.

ச. இரத்தினகோபால்
உரிமையாளர், ஜெகா மோட்டோர்ஸ்,
நெல்லியடி.
இல; 242, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(80286)


பச்சிலைப்பள்ளி குடும்பங்களுக்கு

# கழிக்கப்பட்ட உணவு நிவாரணம்; மீண்டும் வழங்குவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 8

கடந்த ஜுன், ஜுலை மாத நிவாரணத்தில் கழிக்கப்பட்ட பொருள்கள் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கக் கிளைகள் மூலம் மீண்டும் வழங்கப்பட உள்ளதாகப் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி நடத்தப்பட்ட மாநாட்டில் அரச அதிபர் விடுத்த பணிப்புரைக்கு ஏற்ப எதிர் வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் இந்த நிவாரணப்பொருள்கள் வழங்கப்பட இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

திருப்பப்பெறப்பட்ட பொருள்களை அக்கால கட்ட விசேட நிவாரணமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டும வழங்குமாறும் அவ்வாறு வழங்கப்படுகின்ற பொருள்கள் சங்கத்திற்கு அரச அதிபரால் வழங்கப்படும் என்றும் அரச அதிபர் பணித்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முன் ஆயத்த வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ. 8

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தினால் முன் ஆயத்த வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

இந்த வகுப்புக்கள் ஏற்கனவே நடைபெற்ற நிலையங்களில் எதிர்வரும் 12ஆம், 19ஆம், 26ஆம் திகதிகளில் நடத்தப்படும் என தென்மராட்சிக் கோட்டக்கல்வி அதிகாரி நா. சத்தியநாதன் தெரிவித்துள்ளார். (இ-7)

பருத்தித்துறை ஸ்கூட்டர் விபத்து:

# சந்தேக நபரான இளைஞன் நேற்று பிணையில் செல்ல அனுமதி

நெல்லியடி, நவ. 8

ரியூசனுக்கு சென்ற மாணவன் மீது ஸ்கூட்டர் மோதியது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட, இளைஞனை 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 10 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்லுமாறு பருத்தித்துறை, மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை வல்லிபுர பரியாரியார் வீதிச் சந்தியில் கடந்த திங்கட்கிழமை மாலை இந்த விபத்து இடம் பெற்றது.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறைப் பொலிஸார் புலோலி கிழக்கு வராத்துப்பளையைச் சேர்ந்த அருமைத்துரை – ரொனால்ட் (வயது 20) என்பவரைக் கைது செய்து நேற்றுக் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்த சமயமே பிணையில் செல்ல மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

அதேசமயம் இந்த ஸ்கூட்டர்விபத்தில்படுகாயமடைந்து மயக்க நிலையில் மந்திகை மருத்துவ நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாணவன் மேலதிகசிகிச்சைக்காக நேற்று யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

புலோலி கிழக்கு மாதனையைச் சேர்ந்த பரராஜசிங்கம் சஞ்சஜன் (வயது9)என்பவரே தலையில் படுகாயம் அடைந்துள்ளார். (இ-109)


## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
பௌதிக விஞ்ஞான கற்கைநெறி
(2000/2001)
(வெற்றிடம் நிரப்பு பட்டியல்-1)

மேற்படிகற்கை நெறிக்கு வெற்றிடம் நிரப்பு பட்டியல் 1 இல் தெரிவானோர் விபரம் யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானபீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது.

தெரிவான மாணவர்கள் தங்கள் பதிவினை 20—11 2000 க்கு முன்னர் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பதிவாளர்.
08-11-2000
(சி/13742)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக தாதி உத்தியோகத்தர்
செல்வி தில்லைநாதன் நல்லீஸ்பரி
அவர்களின் அன்புத் தந்தை
**சின்னையா தில்லைநாதன்**
அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர்கள்,
A '97
யாழ். போதனா வைத்தியசாலை.
(80296)



## மரண அறிவித்தல்

**முத்தையாபிள்ளை தருமராஜா**
(ஓர்கனைசர்)

கரவைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பரந்தன் கிளிநொச்சி பிரபல வர்த்தகரும் (தருமராஜா ஓர்கனைசேசன் ஸ்தாபனம்) தற்பொழுது கொழும்பு வெள்ளவத்தையில் வசித்தவருமான முத்தையாபிள்ளை தருமராஜா நேற்று முன் தினம் 6-11-2000 திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையாபிள்ளை—கனகம்மாவின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி சின்னம்மாவின் மருமகனும் ருக்குமணியின் அன்புக் கணவரும் கனகாசன கேஸ்வரி, சிறீஸ்கந்தராஜா (லண்டன்), தனுஷா, ஜெயரூபன் (கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), இளங்கோவன் (லண்டன்), கோமேஸ்வரி, தயாளினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் புவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான பாலா கனகலிங்கம் (துசித்தா - யாழ்ப்பாணம்), பாலச்சந்திரன் மற்றும் ராஜேஸ்வரி (கனடா), தம்பிராஜா (தம்பிராஜா கோல்டிங்ஸ் லிமிட்டெட் கொழும்பு, யாழ்ப்பாணம்), விக்னேஸ்வரன் J.P. (எவரிச் கோல்டிங்ஸ் லிமிடெட், எரிபொருள் நிரப்பு நிலையம், மருதனார்மடம்), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுப்பிரமணியம் (கனடா), தியாகராஜா (கனடா), யோகேஸ்வரி, வசந்தி, பரமேஸ்வரி, அம்பிகைபாகன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (9-11-2000) வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு பொரளை டனம்புரி மலர்ச்சாலையிலிருந்து தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
K. M. விக்னேஸ்வரன் J.P.
(சகோதரன்)
34, விவேகானந்தா வீதி,
வெள்ளவத்தை
T. P. 01--337465.
(80294)

# புதைபொருள் ஆராய்ச்சியில் ஜப்பானியரின் மோசடி அம்பலம்

டோக்கியோ, நவ. 8

தொல்பொருள்களைக் கண்டுபிடித்ததாகக் கூறி, தன்னால் புதைக்கப்பட்ட பொருள்களைத் தானே தோண்டி எடுத்து புகழ் சம்பாதித்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஒருவர் ஜப்பானில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளார்.

இது குறித்துக் கூறப்படுவதாவது: -

யெயிஷி பியூஜிமோரா என்பவர் ஜப்பானில் புகழ்பெற்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளர் 20 வருடங்களின் முன்னர் இவர் 40 ஆயிரம் வருடங்களுக்கு முந்தைய கற் கருவிகளை புதை பொருள் ஆராய்ச்சியில் கண்டு பிடித்தார். அதன் பின்னர் இவர் எங்கு புதை பொருள் ஆராய்ச்சிக்காகத் தோண்டினாலும் அங்கு ஏதாவது ஒரு தொல்பொருள் இவருக்கு அகப்பட்டது. இதனால் கைரர்சிக்காரர் என்று சகாக்களால் புகழப்பட்டார்.

இந்த நிலையில் ஜப்பானிய பத்திரிகை ஒளி நாடா ஒன்றில் இருந்து பெறப்பட்ட படங்களை வெளியிட்டது. அவற்றில் பியூஜி மோரா தனியாக மண்ணைத் தோண்டி சில பொருள்களை புதைப்பது படம் பிடிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, உண்மையை ஒப்புக் கொண்ட பியூஜிமோரே, தனது சொந்தச் சேகரிப்புகளில் இருந்த பழங்காலக் கருவிகளை முன் கூட்டியே புதைபொருள் ஆராய்ச்சி நடக்க உள்ள இடங்களில் புதைத்து விட்டு. பின்னர் புதிய கண்டு பிடிப்புகள் போன்று அவற்றைத் தோண்டி எடுத்ததாகவும் —

புகழ் பெற வேண்டும் என்ற ஆசையாலேயே இவ்வாறு நடந்து கொண்டதாகவும் இதற்காக வருந்துவதாகவும் தெரிவித்துள்ளார். (ஒ-8-ரி)

# அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்ததில் தவறில்லை!

## வை. கோபாலசாமி வலியுறுத்து!!



கோவை, நவ. 8

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்து உரையாடியதில் எந்தத் தவறும் இல்லை என்று ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைக் கோபாலசாமி தெரிவித்தார்.

கோயம் புத்தூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். மாற்று சிறு நீரக அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கும் பாலசிங்கத்தை மனிதாபிமான அடிப்படையில் சந்தித்ததாகவும்.

ஒரு தமிழன் என்ற முறையில் தனது கடமையைச் செய்ததாகவும் இதில் தவறு எதுமில்லை என்றும் வை. கோபாலசாமி மேலும் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் சில அரசியல் கட்சிகள் இந்த விடயத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாதது துரதிருஷ்டவசமானது என்று கவலை தெரிவித்த வை. கோபாலசாமி, இதனை மக்களின் தீர்ப்புக்கு விட்டு விடுவதாகவும் குறிப்பிட்டார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மத்தியில் உள்ள தேசிய ஜனநாயக அரசு பின்பற்றிவரும் இலங்கைப் பிரச்சினை தொடர்பான கொள்கை சரியானது என்றும்

கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் கூட்டாகச் சேர்ந்து எடுத்த அந்த முடிவை ம. தி. மு. க மதித்து நடக்கும் என்றும் உறுதி கூறிய வை. கோபாலசாமி இலங்கையில் நடக்கும் இனப்படுகொலைகளுக்கு மத்திய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அமெரிக்காவில் நடைபெற்ற ஐ நா கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு நடு திரும்பும் வழியில் வை. கோபாலசாமி லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்தது இந்தியாவில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது தெரிந்ததே.

(ஒ—8)

# ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பனின் நிபந்தனையை நிறைவேற்றும்

# இரு மாநில அரசுகளின் முடிவை உச்ச நீதிமன்றம் ரத்துச் செய்தது!

புதுடில்லி, நவம்பர் 8

கன்னட நடிகர் ராஜ்குமாரையும் மற்றொருவரையும் விடுவிப்பதற்கு சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் விதித்த நிபந்தனைப்படி தடா சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுவிக்க தமிழக, கர்நாடக அரசுகள் எடுத்த முடிவுகளை இந்திய உச்ச நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது.

தமிழக சிறையில் உள்ளரான 5 பேரையும், கர்நாடகச் சிறையில் உள்ள 51 பேரையும் விடுதலை செய்யத் தமிழக, கர்நாடக தனி நீதிமன்றங்கள் பிறப்பித்த ஆணைகளையும் பிணை அனுமதிகளையும் ரத்துச் செய்த உச்ச நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் குழு 10 ஆண்டுகளாக வீரப்பனைக் கைது செய்யாததற்கு இரு மாநிலங்களுக்கும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வீரப்பன் உட்பட அனைத்துக் குற்றவாளிகளுக்கும் எதிகுற்றங்களை விலக்கிக் கொள்ளும் மாநில அரசுகளின் முடிவுகள் கூட்டுப் பேரம் போல் தெரிவதாக நீதிபதிகள் விசனம் தெரிவித்தனர்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பால், ராஜ்குமாரின் விடுதலை மீண்டும் இழுபறி நிலையை அடைந்துள்ளதாகக் கருதப்படுகிறது. இதே சமயம், தற்போதைய சூழ்நிலையை வீரப்பனிடம் விளக்கி ராஜ்குமாரின் உயிருக்கு ஆபத்தில்லாமல் பா 5 துக்கொள்வதற்காக நக்கீரன் கோபால், பழ நெடுமாறன் உட்பட 4 பேர் அடங்கிய குழு காட்டுக்குள் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

நடிகர் ராஜ்குமாரையும் அவரது உறவினரையும் விடுவிக்க வீரப்பன் விதித்த நிபந்தனையின்படி, தமிழகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 5 தமிழ்த் தீவிர வாதிகளையும், வீரப்பனுக்கு உதவியதற்காக கர்நாடக சிறையில் உள்ள 51 தமிழர்கள் மற்றும் இதே குற்றத்தின் கீழ் வழக்குகளைச் சந்திக்கும் 70 பேரையும் விடுதலை செய்ய இரு மாநில அரசுகளும் எடுத்த முடிவை ரத்துச் செய்யும்படி வீரப்பனால் கொல்லப்பட்ட பொலீஸ் அதிகாரியின் தந்தை தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பே தற்போது வழங்கப்பட்டுள்ளது.

## எதிர்ப்பு

சென்னை, நவ. 8

தமிழகத்தில் தனியார் நிறுவனம் ஒன்று சென்னையில் ஏற்பாடு செய்த அழகிப் போட்டிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக மகளிர் பிரிவினரும், மகளிர் விடுதலை அமைப்புகளும் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பிரபல நடிகையும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வைஜயந்திமாலா பாலியும் கலந்து கொண்டார். (ஒ-8)

## கூட்டு ஒத்திகை

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கான கூட்டுக் கடற்படை ஒத்திகையை இன்று இந்திய, ஜப்பானியக் கடற்படைகள் நடத்தவுள்ளன.

இதில் பங்குபற்றும் ஜப்பானியப் போர்க் கப்பல் 64 அதிகாரிகள், 100 படையினர் மற்றும் இரு ஹெலிகொப்டர்களுடன் சென்னைத்துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

# ஜெயலலிதாவுக்கு ஸ்பிக் ஊழலில் திட்டவட்டமான பங்கு உண்டு

## நீதி மன்றத்தில் சி. பி. ஐ. தெரிவிப்பு



'ஸ்பிக்' பங்கு மாற்ற ஊழலில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்கும், 'ஸ்பிக்' நிறுவனத்தின் தலைவர் ஏ.சி. முத்தையாவுக்கும் திட்டவட்டமான பங்கு இருப்பதாக மத்திய புலனாய்வுத் துறையான, சி. பி. ஐ. தெரிவித்துள்ளது.

ஜெயலலிதா தமிழக முதலமைச்சராக இருந்த போது மாநில அரசின் 'டிட்கோ' நிறுவனத்துக்கு உரிமையுள்ள 'ஸ்பிக்' நிறுவனப்பங்குகளை, மிகக் குறைந்த விலைக்கு 'ஸ்பிக்' நிறுவனத்துக்கு மாற்றிக் கொடுத்ததில் அரசுக்கு சுமார் 28 கோடிரூபா இழப்பு ஏற்படுத்தியதாகத் தொடரப்பட்டுள்ள வழக்கில் இருந்து தம்மை விடுவிக்கக் கோரி ஏ சி. முத்தையா தாக்கல் செய்திருந்த மனுவுக்கு மத்திய புலனாய்வுத் துறை சமர்ப்பித்த பதில் மனுவில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

பங்கு மாற்றத்தின் மூலம், ஏ.சி முத்தையாவும், அவரது தந்தையான காலம் சென்ற எம். ஏ. சிதம்பரமும் லாபம் அனுபவித்ததாகவும் பதில் மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதனை அடுத்து விசாரணையை நீதிபதி எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

(ஒ-8)

## பலஸ்தீனர்களைக் காப்பாற்ற

# ஐ. நா. படையை அனுப்பும்படி யசீர் அரபாத் வேண்டுகோள்

காஸா, நவ. 8

இஸ்ரேலிய ராணுவத்தின் கண்காணிப்பில் உள்ள பகுதிகளில் வாழும் பலஸ்தீனர்களைக் காப்பாற்ற சர்வதேசச் சமாதானப் படையை அனுப்பும்படி ஐ. நா. பாதுகாப்புச் சபையிடம் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்குக்கரை மற்றும் காஸா நிலப்பரப்புகளில் கடந்த 5 வாரங்களாக இஸ்ரேலியப் படையினருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே நிகழும் மோதல்கள் தொடர்பாகவே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்தார்.

அணிசேரா நாடுகள் அமைப்பில் உள்ள அரேபிய நாடுகளிடமும் இக்கோரிக்கையை அரபாத் சமர்ப்பித்துள்ளார்.

இதற்கிடையில் மேற்காசியப் பிரச்சினையில் அமெரிக்காவின் மத்தியஸ்தம் பலனளிக்காது என்றும் ஐரோப்பிய யூனியன் அல்லது ரஷ்யா மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்றும் பலஸ்தீனர்கள் கோரி வருவதாகக் கூறப்படுகிறது.

இரு தரப்பினரிடையேயான



மோதல்களில் நேற்று முன்தினம் துகாமி நகரில் 14 வயதுச் சிறுவனும் காஸாவில் 17 வயது வாலிபரும் இஸ்ரேலியத் தரப்புத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 5 வாரகால மோதல்களில் இது வரை 176 பேர் உயிரிழந்துள்ளனர். (ஒ-8)

## மோசமான சாலை விபத்தொன்றில்

# 115 வாகனங்கள் மோதியதில் நைஜீரியாவில் 150 பேர் பலி!

லாகோஸ், நவ. 8

நைஜீரியாவில் ஏற்பட்ட மோசமான சாலை விபத்தில் 115 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதித் தீப்பிடித்ததில் 150 பேர் உடல் கருகி இறந்தனர்.

நைஜீரியாவின் தெற்குப் பகுதியில் அதி வேக சாலையில் சென்று கொண்டிருந்த பெற்றோல் பவுஸர் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததால் அருகில் வந்த மற்றொரு வாகனத்தின் மீது மோதிக் கவிழ்ந்து தீப்பிடித்தது.

சம்பவம் நடந்த போது அந்த அதிவேகச் சாலையில் வாகனங்கள் மணிக்கு சுமார் நூறு கிலோ மீற்றர் வேகத்தில் விரைந்து கொண்டிருந்ததால் திடீரென ஏற்பட்ட விபத்தையடுத்து, வேகத்தைக் கட்டுப் படுத்த முடியாமல் தீப்பிடித்த பவுஸர் மீதே அடுத்தடுத்து மோதி எரிந்தன.

இவ்வாறு 115 வாகனங்கள் மோதித் தீப்பற்றியதில் அவற்றில் பயணம் செய்த 150 பேர் உயிரிழந்துள்ளனர்.

(ஒ-8)

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய வேண்டும்

## கலந்துரையாடலில் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ 8

யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு ப.நோ.கூ. சங்கப் பிரதிநிதிகள் ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரனிடம் கோரியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் மேற்படி சங்கப்பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாடலிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் தெல்லிப்பழை ப. நோ. கூ. ச. தலைவர் எஸ். தனபாலசிங்கம், பொது முகாமையாளர் எஸ். செல்வராசா, கைதடி ப. நோ. கூ. ச. பொது முகாமையாளர் க. சற்குணநாதன், பளை ப. நோ. கூ. ச. பொது முகாமையாளர் எஸ் கணேஷ், சாவகச்சேரி ப நோ கூ. ச. தலைவர் செ. சுப்பிரமணியம், பொது முகாமையாளர் சி. தேவகுமார், உடுப்பிட்டி ப. நோ. கூ. ச. உபதலைவர் எஸ். நாகலிங்கம், காரைநகர் ப. நோ. கூ. ச. தலைவர் உபதலைவர் எஸ் நாகலிங்கம் ஆகியோர் ப. நோ. கூ. சங்கங்களின் சார்பில் மேற்படி கோரிக்கையை விடுத்தனர்.

இக் கலந்துரையாடலில் ப. நோ. கூ. சங்கங்களினால் முன் வைக்கப்பட்ட ஏனைய கோரிக்கைகளின் விவரம் வருமாறு:-

★ ப. நோ. கூ. சங்க ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

★ குறைந்த வட்டி வீதத்தில் இலகுகடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

★ படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க தலைமைச் செயலகக் கட்டடத்தை மீண்டும் பெற்றுத்தரவேண்டும்.

★ கைதடி ப. நோ. கூ. சங்கத்திற்கு அண்மையில் இடம்பெற்ற இடப்பெயர்வினால் இரண்டு கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனை ஈடுசெய்யும் வகையில் உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

★ தெல்லிப்பழை ப.நோ.கூ சங்கத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்களால் 4 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதியான பொருள் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1992 ஆம் ஆண்டு இச்சங்கத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 27 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த நிதி இதுவரையும் சங்கத்திற்கு கிடைக்கவில்லை. இதற்கு என்ன நடந்தது என்பது பற்றி தெரியப்படுத்த வேண்டும்.

இச்சங்கத்திற்கு ஒரு கோடி ரூபா வரையில் கடன் உள்ளது. கடனுக்குப் பொருள்கள் எடுத்து விற்பனை செய்வதனால் சங்கத்தை முன்னேற்ற முடியாமலுள்ளது. எனவே இலகுகடன் மற்றும் இழப்பீடுகள் இச்சங்கத்திற்கு வழங்கப்படவேண்டும்.

ப. நோ. கூ. சங்க லொறிகள் படையினரின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதனால் அவற்றை மீண்டும் திருத்தம் செய்வதற்கு பல லட்சக் கணக்கான ரூபாக்களைச் செலவு செய்துள்ளோம். இச் செலவுகளை அரசிடமிருந்து பெற்றுத்தர வேண்டும்.

(ஐ-5)


## சைவ பரிபாலனசபை யாழ்ப்பாணம்
## சைவசமய தீட்சை

நாள்: 10–11–2000 வெள்ளிக்கிழமை.
நேரம்: காலை 8.00 (புதியநேரம்)
இடம்: நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபம்

தீட்சாகுரு: காரைவாய்
சிவஸ்ரீ லக. திருஞானசம்பந்தக் குருக்கள்.

7 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் பங்கு பற்றலாம்.

–சைவ பரிபாலன சபை.

(சி/13735)


## கண்ணீர் அஞ்சலி

எமது மாகாணப் பணிப்பாளர் வ/கி (வ)
திரு. எஸ். ஐ. ஆர். குரூஸ் அவர்களின்
அன்புத் தந்தையார்

காலமானதால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிறைவேற்றுப் பொறியியலாளரும்;
சக உத்தியோகத்தர்களும்
நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம்
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.

(80282)

## முதலாம் ஆண்டின் நீங்காத நினைவலைகள்.....



திருமதி
## செல்வரத்தினம் நடராசா

பாரில்: 1929-07-13
சொர்க்கத்தில்: 1999-10-22

திதி: 2000–11–08

சொல்லாமல் கொள்ளாமல் சொர்க்கம்தான் அடைந்தனையோ?
சோகமே உருவாக சோர்ந்து போய் நிற்கின்றோம்
வருடம் ஒன்று சென்றதம்மா — உன் வண்ணமுகம் மறையவில்லை.
தருணம் பார்த்து எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றதேனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன்.

நிரந்தர முகவரி:-
கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:-
'சேதுபதி',
வதிரி, கரவெட்டி.

(80200)

## கணனிகள் கையளிப்பு

தென்மராட்சி நவ. 8

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து மீட்கப்பட்ட கணனிகள் படையினரால் இணுவில் மத்திய கல்லூரியில் வைத்து அதிபரிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)


நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி
## நவீனசந்தை மேல்மாடிக்கடை ஒப்பந்தம் புதுப்பித்தல்

மேற்படி விடயம் சம்பந்தமான எனது 08-08-2000 ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் ஏற்கனவே கடைகளை ஒப்பந்த மூலம் பெற்றவர்கள் இன்னமும் ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்கு விண்ணப்பிக்கத் தவறியிருந்தால் 05-12-2000 ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். இத் திகதிக்குப் பின் கோரப்படாத கடைகளுக்குக் கேள்விகள் கோரப்பட்டு அதன் அடிப்படையில் வழங்கப்படுமென அறியத்தருகிறேன்.

க. மணிபல்லவராஜன்,
(ஜே. பி. யூ. எம்),
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
03-11-2000.

(சி/13732)


## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா இராசரத்தினம் [ஓமான்]

கோட்டைக்காடு மல்லாகத்தில் வசித்தவரும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய கந்தையா இராசரத்தினம் 6-11-2000 லண்டனில் காலமானதையிட்டு அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மல்லாகம் சாளம்பை முருகன்
ஆலய பரிபாலன சபையும்,
இந்து இளைஞர் தொண்டர் சபையும்.

கோட்டைக்காடு, மல்லாகம். (80291)

## மரண அறிவித்தல்கள்

அருட்சகோதரி
### டிசான்றால் வஸ்தியாம்பிள்ளை (தி.கு.க)

மண்ணில்: 1922- 01- 31
விண்ணில்: 2000- 11- 07

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி டிசான்றால் வஸ்தியாம்பிள்ளை 2000- 11- 07 இல் இளவாலை தி.கு. கன்னியர் மடத்தில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 2000- 11- 08 மாலை 4 மணிக்கு இரங்கற் திருப்பலியுடன் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மேரி வீர்ஜினி
மாகாண ஆலோசகர்,
மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம்.

(80283)

### கதிர்காமு பாலச்சந்திரன்

தென்புலோலி சாரையடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் டென்மார்க்கில் வசித்தவருமான கதிர்காமு பாலச்சந்திரன் 3-11-2000 ஆம் திகதி டென்மார்க்கில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கதிர்காமு–இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், நமசிவாயம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)– இராசரத்தினம் தம்பதிகளின் அருமை மருமகனும், விஜயலக்சுமியின் அன்புக் கணவரும், தயாபரை, டனி, ரீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திராதேவியின் (மட்டக்களப்பு) சகோதரரும், தருமலிங்கம் (சந்திரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர், மட்டக்களப்பு) இராமகிருஷ்ணன் (ஆஸ்திரேலியா), கோபாலகிருஷ்ணன் (லண்டன்), இராதாகிருஷ்ணன் (கனடா), இராதாலட்சுமி (லண்டன்), சுந்தரலக்ஸ்மி (கொழும்பு), ஜெயலக்ஸ்மி (கனடா), முத்துலக்ஸ்மி (கனடா), கணேசலிங்கம், பஞ்சலிங்கம் (ஆஸ்திரேலியா), நிறைஞ்சலா (லண்டன்), சசிகலா (லண்டன்), மாலதி (லண்டன்), சத்தியேந்திரா (லண்டன்), சோபா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அருள்நங்கை (ஆஸ்திரேலியா), பாமா (லண்டன்), இராமச்சந்திரன் (லண்டன்), கௌரி (கனடா), இராசமாணிக்கம் (கொழும்பு), இராசநாயகம் (கனடா), மோகன்ராஜ் (கனடா) ஆகியோரின் சகலனும், செந்தூரன் (மட்டக்களப்பு), சிந்து ஜெயந்த் (மட்டக்களப்பு), வசிகரன் (மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விநாயகம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) – பொன்மலர் தம்பதிகள், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (9-11-2000) வியாழக்கிழமை டென்மார்க்கில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. விநாயகம்
(தாய்மாமன்)

சாரையடி,
புலோலி தெற்கு,
புலோலி.

(80288)

# உதயன்

## வன்னிக்கு மருந்து

வன்னிப் பிரதேசத்தின் மீது கடந்த பத்து வருடங்களாக அரசாங்கம் இறுக்கமான பொருளாதாரத் தடையை விதித்துள்ளது பழைய செய்தி. தடையின் இறுக்கம் தீவிரமாக்கப்பட்டு அங்கு வாழும் லட்சக் கணக்கான தமிழ் மக்கள் தமது அன்றாட, அத்தியாவசியத் தேவைகளைத் தானும் நிறைவேற்ற முடியாமல் இன்னற்படுகிறார்கள்.

அடிப்படைத் தேவைகளில் மிகப் பிரதானமான உணவுக்கும் மருந்துக்கும் வன்னியில் அடிக்கடி தட்டுப்பாடு உண்டாகிறது. இந்த இரண்டையும் எடுத்துச் செல்வதற்குக் கூட பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை. அவற்றைக் கட்டுப்படுத்தாவிடில் பொதுமக்களுக்கு என்ற போர்வையில் விடுதலைப் புலிகளுக்குத் தேவையானவை தாராளமாக உட்சென்றுவிடும் என்பது அரசாங்கத்தின் வாதம்.

அதனால் சுகாதாரத் திணைக்களம் போன்ற அத்தியாவசிய சேவைகளை நிறைவேற்றும் அரச நிறுவனங்கள், தாம் அனுப்பும் பொருள்களை அளந்தும், அளந்த பின்னர் வெட்டியுமே வன்னிக்கு அனுப்புகின்றன. இதன் பின்னர், பாதுகாப்பு அமைச்சுத் திருப்திப்பட்டால் மட்டுமே அந்த அளவை வன்னிக்குள் எடுத்துச் செல்ல முடியும். சில வேளைகளில் தனது சொந்தக் கணக்குப் பிரகாரமே உணவு, மருந்துப் பொருள்களை கொண்டு செல்ல அது அனுமதிக்கின்றது.

பல படிகளைத் தாண்டி, பல அதிகாரிகளின் விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டே வன்னித் தமிழ் மக்களின் உணவு மற்றும் மருந்துத் தேவைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

இந்த அநியாயம் குறித்து மனித உரிமை மற்றும் மனித நேய அமைப்புகள் கண்டித்திருந்த போதிலும், அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள மக்களுக்குரிய பாதிப்பு நிலையை- உண்மை நிலையை- எடுத்துக் காட்டிய போதிலும், அரசு இறங்கிவர --- சிறிதேனும் இரங்கிச் செயற்பட -- 'கருணை' கொள்ளவில்லை.

நீண்ட காலமாகவே மனிதாபிமானமற்ற இறுக்கம் தொடர்கிறது. மறுபரிசிலனை, தளர்வு என்று எதுவுமில்லை. இவை போதாது என்று மருந்து வகைகளை வன்னிக்கு எடுத்துச் செல்வதில் மேலும் ஒரு பாறாங்கல் இடையில் போடப்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

சுகாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு வன்னிக்கு மருந்து வகைகளை — நிர்ணயிக்கப்பட்ட அளவை — எடுத்துச் செல்ல அனுமதி வழங்கிய போதிலும் படையினர் தடை விதிக்கின்றனராம். சாமி விடை கொடுத்தாலும் பூசாரி விடை கொடுக்காத இந்த நிலையால் வன்னி நோயாளர்கள் பல்லாற்றானும் பாதிப்புறுகின்றனர்;

வவுனியா, பிரமணாலங்குளம் சோதனைச் சாவடிப் படையினர் குருவுக்கு மிஞ்சிய சிடராகி, தமது அதிகாரத்தைக் காட்டுகின்றனர்; வன்னி மக்களின் — நோயாளரின் — உயிரோடு விளையாடும் அதிகாரத்தை ஒவ்வொரு தரப்பும் தாமே எடுத்துக் கொண்டு "ஆட்சி" செய்கின்றனர்.

இதனை அரசாங்கத்தின் உயர்பீடம் கண்டும் காணாதது போலச் செயற்படுகிறதா? இது விடயத்தில்உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிடில் வன்னி மக்களை மறைமுகமாகச் சாகடிக்க அரசு முனைகிறது என்பதே அர்த்தமாகிவிடும்.

# சமாதானப் பேச்சை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய விசேட குழு

## அடுத்த வாரம் அமைக்கப்படலாம்

கொழும்பு, நவ. 08

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக ஆலோசிப்பதற்கு என சகல அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட உள்ளது.

இது தொடர்பான பேச்சுக்கள் தற்போது நடைபெற்று வருகின்றன அடுத்த வாரமளவில் இக் குழு அமைக்கப்பட்டுவிடும் என்று அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டிக் கொழும்பு ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் கடந்த வாரம் தலைவர் பிரபாகரனுடன் நடத்திய பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியதன் அடிப்படையிலேயே இந்தக் குழு அமைக்கப்பட உள்ளது,

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிமுறைகளைக் கண்டறியும் வகையில் செயற்படுவதே இந்தக் குழுவின் பணியாக இருக்கும் என்று தெரிவிக்கபபடுகின்றது

இதேவேளை —

புலிகளிடம் முன்வைக்கக் கூடிய புதிய அரசமைப்பு யோசனைகள் உருவாக்கப்பட உள்ளன என்றும் —

அதனடிப்படையில் புதிய சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப் படலாம் என்றும்—

எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வருட இறுதியில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பாரிஸில் நடைபெற உள்ளது அதற்கு முன்னர் சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதில் அரசாங்கம்சிரத்தையுடன் செயற்படுவதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன

(ஐ-4)

## சிவகுமாரன் சிலை விவகாரம்; புளொட் அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 8

தியாகி சிவகுமாரனின் சிலையை நிறுவுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக புளொட் அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதியின் கணவரான அமரர் விஜயகுமாரதுங்கவின் சிலை யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ளதாக யாழ். சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சிலையை நிறுவுவது தொடர்பாக எதுவித ஆட்சேபனையோ, எதிர்ப்போ எமக்கில்லை.

தியாகி சிவகுமாரனின் சிலை நிறுவுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில். இதுபோன்ற செயல்கள் தமிழ் மக்கள் மத்தியில் மனக் கசப்புக்களையும் அரசின் உறுதிமொழிகள் மீதும், தீர்வு முயற்சிகள் மீதும் நம்பிக்கையீனங்களையுமே ஏற்படுத்தும்

இப்படிப்பட்ட விடயங்களிலேயே பாரபட்சம் காட்டப்படும் போது எமது உரிமைகள், அதிகாரங்கள் எவ்வாறு மதிக்கப்பட்டு எமக்கொரு தீர்வு கிடைக்க வழி காணப்படும் என்ற சந்தேகங்கள் எழுவதற்கு நேரமாகாது

மேலும் சிவகுமாரனின் சிலை முன்னர் நிறுவப்பட்டிருந்தமையும் அந்தச் சிலை சேதமாக்கப்பட்டமையும் யாவரும் அறிந்தவையே.

எனவே தீர்வு முயற்சிகள் வெற்றியளித்து சமாதானம் ஏற்படவேண்டுமாயின் இது போன்ற விசமத்தனமான செயல்கள் மீது சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்தி செயற்படுவது ஆரோக்கியமானது எனக் கருதுகின்றோம் — என்றுள்ளது.

( ஐ — 3 )

## நிவாரண அனுமதிப்பத்திரம் விநியோகம்

தென்மராட்சி, நவ. 8

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கான நவம்பர் மாத நிவாரண உலர் உணவுப் பொருள்களைப் பெறுவதற்குரிய அனுமதிப் பத்திரங்கள் நாளை முதல் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களால் வழங்கப் படவுள்ளன.

இதேவேளை சமுர்த்தி நிவாரணம்மற்றும்வன்னியிலிருந்து மீளக் குடியமர்ந்தோருக்கான நிவாரணம் ஆகியவற்றுக்கான பெர்மிட்டுக்களும் அந்தந்தக் கிராம அலுவலர்களிடம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

( ஐ — 117)

## சாவகச்சேரி நகருக்குச் செல்வது இடை நிறுத்தம்

தென்மராட்சி, நவ 8

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகள் ஆகியவற்றைப் பார்வையிடச் செல்வது மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகருக்குச் செல்வதற்காக நேற்று வரணி சிவில் அலுவலகத்திற்கு சென்ற வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோர் திருப்பி அனுப்பப்பட்டனர்.

(ஐ-117)

# மத்திய பஸ் நிலையம் சங்கானையில் அமைப்பு

## திறப்பு விழா இன்று காலை நடக்கிறது

சண்டிலிப்பாய், நவ. 8

சங்கானை சந்தைப்பகுதியில் அமைக்கப்பட்ட மத்திய பஸ் நிலையத் திறப்பு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஈ. பி. டி. பி செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் இந்த மத்திய பஸ் நிலையம் புதிதாக நிறுவப்பட்டுள்ளது.

இன்றைய திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளருமான க. மணிபல்லவராஜன் கலந்து கொள்வார்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வெ. அன்ரன் ஜோன்சன், வலி. மேற்குப் பிரதேச செயலர் ந. வேதநாயகன், போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(ஐ-135)

## விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு விழா

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியில் புதிதாக நிறுவப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திருமதி விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக கல்வித் திணைக்கள பொறியியலாளர் கு. சிவபாலன் கலந்து கொள்வார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதிச.காங்கேயன், உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. கதிர்காமநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(ஐ)

## இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படும் பயிற்சி நெறிகளுக்கான இறுதிப்பரீட்சை எதிர் வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்தார்.

(ஐ-7)

## கொக்குவில் கிழக்கில் தேடுதல்

யாழ்ப்பாணம், நவ. 8

கொக்குவில் கிழக்குப் பகுதியை நேற்றுக் காலை 6 மணியளவில் சுற்றிவளைத்த படையினர் வீடு வீடாகச் சென்று தீவிரமான தேடுதல் நடத்தினர்.

இந்தத் தேடுதலின் போது பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட இளைஞர், யுவதிகள் அனைவரும் கடுமையாக விசாரிக்கப்பட்டதாகவும்—

பின்னர் அவர்களது அடையாள அட்டைகளை வாங்கிச் சென்ற படையினர் திருநெல்வேலி பலாலி வீதியில் உள்ள சிவில் அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கோரியதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-6)

## நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், நவ. 8

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இன்று நடைபெறுகின்றது.

மேலதிக சிகிச்சைக்காக இன்று கொழும்புக்குச் செல்லப் பதிவு செய்த நோயாளர்களை காலை 7 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-139)

**உதயவாக்கு**

அன்னை ஒரு பொழுதும் மறந்து விடாதே! அன்னைப் போன்று அவ்வளவு விரைவில் முதுமையுறுவது வேறு யாதுமன்று.

—பிரான்ஸ்

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 8.

ஹற்றன் நஷனல் வங்கி நடத்தும் புத்தாயிரம் ஆண்டுக்குரிய எச்.என்.பி. வெற்றிக்கேடயத்துக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். இந்து ஆடுகளத்தில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 3.30 மணி — ஆண்கள் — யாழ். இந்துஅணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி சிவப்பு அணி.

★ பிற்பகல் 4.15 மணி — கொக்குவில் இந்து அணி எதிர் யுத்தார்மல் அணி. (ஐ-3)

★ ★ ★

வலி. வடக்கு, நவ. 8

வடமாகாண தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக்கழகம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில் உடுவில் சிந்து வி. கழகமும் மல்வம் இந்து வி. கழகமும் மோதுகின்றன. (ஐ-86)

★ ★ ★

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இவ்வார இறுதியில் ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் போட்டியை மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடத்த வேண்டிய ஒழுங்குகள் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ் லீக்கில் வலிகாமம் பகுதியைச் சேர்ந்த சுமார் 30 கழகங்கள் அங்கம் வகிக்கின்றன. (ஐ-86)

★ ★ ★

வலி. வடக்கு, நவ. 8

வலிகாமம் கல்வி வலய சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையேயான 14 வயதிற்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு

**14 வயதுப் பிரிவு**

★ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.பாடசாலை.

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர்மாதகல் சென்.யோசேப் வித்தியாலயம்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் வடக்கு வித்தியாலயம்.

(ஐ-86)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், நவ. 8

நீர்வேலி—மாசிவன் அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இன்று காலை 9 மணி முதல் 10 45 மணி மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-7)

## நாளை

ஐப்பசி 24

வியாழக்கிழமை

திதி: திரயோதசி

வைகறை 5.25 வரை.

நட்சத்திரம்: ரேவதி

பின்னிரவு 5.47 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 7.35— 9 05

இராகுகாலம் 1 35 3 05

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### உடன் விற்பனைக்கு

புதிய நல்ல நிலையிலுள்ள பாவித்த நிலை, ஜன்னல், கதவு, சாப்பாட்டுமேசை, கதிரை (புதியவை) அத்துடன் தீராந்தி, வேம்பு, முதிரை, மவுக்கினி ஆகிய மரங்கள் பலகை அறுக்கக்கூடிய நிலையிலுள்ளவை. சீவுளிப்பட்டறை, கடைச்சல் பட்டறை என்பனவும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அருந்தவச்செல்வம் மங்களகுமாரி, துரைவீதி, இணுவில் தெற்கு, இணுவில். (C/13678)

புதிய சைனா(**CHINA**)வயலின், கோழிக்குஞ்சு பொரிக்கும் புதிய இயந்திரம் (**U.K**), இங்கிலண்ட் (**ENG LAND**) வில்லியஸ்12 நீர் இறைக்கும் இயந்திரம் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி.திருக்குமரன், தொல்புரம் கிழக்கு, கோயிலடி, சுழிபுரம். (80268)

### விற்பனைக்கு

வியாபார ஸ்தாபனத்திற்கு பாவிக்கக்கூடிய இரும்புப் பெட்டி (லண்டன் தயாரிப்பு) விற்பனைக்குண்டு. தொடர்பு: 105 (249), கே.கே.எஸ்.வீதி, பெரிய கடை, யாழ்ப்பாணம். (80260)

300 கூரை ஓடுகள் விற்பனைக்குண்டு. ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, நாகலிங்கசுவாமிகள் வீதி, (பிளாக் வீதி), சங்கானை (நிகரை வைரவர் கோயில் அருகில்). (80263)

### A/L பௌதிகவியல்

பௌதிகவியல் இணைந்த கணிதம் பலவருட அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் முழுப் பாடத்திட்டமும் குறுகியகாலத்தில் பயிற்சிகளுடன் சிறப்பாகக் கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும பிற்பகல 3 மணிக்குப் பின்பு சந்திக்கவும். **R.** பாலசுப்பிரமணியம், **B.Sc. (Cey.) Dip. in Ed.,** 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (80207)

### தவறிவிட்டது

தங்கவேல் கிருஷ்ணகுமார் என்பவருடைய விஷேட அடையாள அட்டை (இல.0901031315) நாச்சிமார் கோயிலடிப் பகுதிக்கும் யாழ். நகர்ப் பகுதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஸ்ரீ காமாட்சி கபே, கே.கே. எஸ்.வீதி, (யாழ்.இந்துக் கல்லூரி அருகில்) எனும் முகவரியில் கொடுத்துதவவும். (80284)

### மணமக்கள் தேவை

இந்து சமய 28 வயது உதயத்தில் செவ்வாய் (கும்பராசி) உத்தரம் 4ஆம் கால ஆசிரிய மணமகளுக்கும், 25 வயது செவ்வாய்க் குற்றமற்ற கிளறிக்கல் லிகிதர் மணமகனுக்கும் மணமக்கள் தேவை. மாற்றுச் சம்பந்தமும் ஏற்றுக் கொள்ளப்படும். தொடர்பு: விளம்பர இல.1132, மே/பா உதயன். (80238)

### கவிதைப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.8

யாழ். இந்துசமயப் பேரவை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் கவிதைப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

கவிதைகள் யாவும் ஆசிரியப்பா, வெண்பா மற்றும் விருத்தம், கட்டளைக்கலித்துறை ஆகிய யாப்பு வடிவங்களில் அமையும்.

போட்டியாளர்கள் அனைவரும் போட்டி நடைபெறும் மண்டபத்துக்கு நேரில் வந்து கவிதைகளை எழுத வேண்டும்.

இந்தப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை 'செயலாளர்' யாழ். இந்து சமயப் பேரவை. ஏழாலை மேற்கு, ஏழாலை' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

### வாராந்த நிகழ்வுகள்

கொழும்புத்துறை, நவ.8

தொண்டமானாறு ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பேரவையின் தலைவர் தொழிலதிபர். சி. நாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை 'இசைமணி' சி. துரைராஜா நிகழ்த்துவார்.

எஸ்.பத்மலிங்கம் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.

நண்பகல் 12.30 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (ஐ-30-173)

## பண்டாரவளைப் படுகொலைகளை கண்டித்து கொழும்பில் சுவரொட்டிகள்

பண்டாரவளை பிந்துனுவெவ தடுப்பு முகாமில் இடம்பெற்ற படுகொலையைக கண்டித்தும அதனைத் தொடர்ந்து மலையகப் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும தலைநகர் கொழும்பில் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

அரச பாதுகாப்பில் இருந்த தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்வது கொடூரச் செயல் என்றும்-

இதனை விசாரித்து குற்றவாளிகளுக்குத தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்றும் -

மனித உரிமைகள் நிறுவனங்கள் பல இணைந்து கொழும்பில் இந்தச் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளன. இதற்கிடையில் மலையகப் பகுதிகளில் இனவாதத்தைத் தூண்டும் அரசியல்வாதிகளையும் இனவாத அமைப்புக்களையும் கண்டித்து மக்கள் விடுதலை முன்னணியும் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது. (ஐ-20)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**வீரகத்திப்பிள்ளை இராசசேகரம்**

(பிரபல வர்த்தகர், யாழ்ப்பாணம்)

மலர்வு 06-03-1908 | உதிர்வு 21-10-1999

*திதி: 08-11-2000*

**பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் இருந்து எம்மையெல்லாம் வழிநடத்தி வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு அகலாது.**

*உங்கள் ஆத்மா சாந்தியடைய முருகப் பெருமானை வேண்டி நிற்கும்*

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

*இ.பயோதரி அம்பாள், 9, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.*

(80256)

## 46 ஆவது நாள் கண்ணீர்க் காணிக்கை

மண்ணில் உதயம் 06 - 01 - 1961



விண்ணில் உதயம் 24 - 09 - 2000

**அமரர் வீரசிங்கம் உதயகுமார்** (B.Sc.)

(ஆசிரியர், யா/ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி)

எம் உதிரத்தில் உதித்த உதயகுமாரா! எம் ஆனந்தத்
திருமகனே! எங்கையா சென்றாய் நீ?
உடன் பிறந்த சோதரர்கள்
உளம் உருகித் தவிக்கையிலே
உமை, சிவனின் பாதங்களிலே
இள வயதில் தடம் பதித்தீர்!
நாம் 'ஓ' வென்று அழுத குரல்
உன் காதில் வீழ்ந்த பின்னும்
ஏனென்றும் கேளாமல்
எங்கையா போய்விட்டாய்?
பார்க்கும் இடமெல்லாம் – உன்
பாசமுகம் தோன்றுதையா!
கண்மூடித் தூங்கையில் – உன்
வண்ணமுகம் வருகுதையா...!
ஒரேயொரு முறை மட்டும்
ஓடி வரமாட்டாயோ?

உங்கள் பிரிவால் துயருறும்

**அப்பா, அம்மா, சகோதரர்கள், மைத்துனர், மைத்துனி.**

*பழைய இல: 02, பி.ஏ தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

(80269)

## திருமண மங்கல வாழ்த்து

மணமகன் **தயாபாலன்**



மணமகள் **சசிகலா**

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றித் தயாபாலன்
திறத்தால் சசியுடனே சேர்ந்தோங்கிப் – புறத்தாற்றில்
புண்ணியமும் கண்ணியமும் போற்றிப் புகழோடு
எண்ணியவை முடித்திடுக ஏற்று

(80198)

அன்புடன் யாழ் மத்திய கல்லூரி
துணை ஆளணியினரின் சார்பாக
**திரு.திருமதி ந.மகேந்திரன்**

**08-11-2000**

## 46 ஆவது நாள் நினைவு அஞ்சலி

**தோற்றம்** 06 - 01 - 1961



**மறைவு** 24 - 09 - 2000

**அமரர் வீரசிங்கம் உதயகுமார்** (B.Sc.)

(ஆசிரியர், யா/ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி)

'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் (தந்தை)
எந்நோற்றான் கொல் எனும் சொல்'
'அன்பும் அறனும் உடைத்தாயின் இல் (வாழ்க்கை)
பண்பும் பயனும் அது'

என்னும் வள்ளுவனின வாக்குக்கு இணங்க தாய் தந்தையுடனும், பின்பு மணவாழ்க்கையில் இணைந்து தம்மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்து வரும்போது அகால மரணமடைந்த எங்கள் நண்பரும், சக வர்த்தகர் **ச.கணேஸ்வரன் அவர்களுடைய மைத்துனருமாகிய அமரர் வீரசிங்கம் உதயகுமார் அவர்களுக்கு எங்கள் 46 ஆவது நாள் நினைவு அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.**

**ஊர்காவற்றுறை, வர்த்தக நண்பர்கள்.**

(80240)

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 01 - 10 - 1935



மறைவு 09 - 10 - 2000

**அமரர் கந்தையா பரமநாதன்**

**(இளைப்பாறிய வங்கி முகாமையாளர்)**

09.10.2000 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு 31 ஆம் நாள் நினைவாக இன்று (08.11.2000) புதன்கிழமை பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

* இடப்பெயர்ச்சி காரணமாக சகலரையும் நேரில் சந்திக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

**அனைவரையும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**திருமதி பரமநாதன் (மனைவி)
சகோதர, சகோதரியர்,
மைத்துனர்.**

*இராச வீதி, நீர்வேலி.*

(80253)

## [..]த்துக்கொள்ளவும்

இணுவில் சிவகாமசுந்தரி சனசமூக நிலைய கட்டட நிர்மாண வரவு செலவு அறிக்கையில் காரைக்கால் சிவன் கோயிலடி இணுவில் கிழக்கைச் சேர்ந்த திரு. P. கோபி [..]ான் என்பவரது பொருள் அன்பளிப்பு (ஒரு பைக்கட் சீமெந்து) எனும் விவரம் தவற விடப்பட்டுள்ளது. மேற்படி விடயத்தை வரவு செலவு அறிக்கையில் சேர்த்து வாசிக்கவும்.

**இணுவில் சிவகாமசுந்தரி சனசமூக நிலையம்,**

***இணுவில் கிழக்கு.***

## ரெலோ உறுப்பினர் இருவர் சரண்

மட்டக்களப்பு ஆரையம்பதி இளைஞர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலீஸாரினால் தேடப்பட்டுவந்த ஆரையம்பதி ரெலோ முகாமைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருவர் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

தீபாவளித் தினத்தன்று ஆரையம்பதியைச் சேர்ந்த தாமோதரம் சுரேந்திரன்(வயது 27) என்பவர் ரெலோ உறுப்பினர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பாக ஆரையம்பதி ரெலோ முகாம் பொறுப்பாளர் உட்பட ஐவரை பொலீஸார் தேடிவந்தனர்.

அவர்களில் சரத்,தாஸ்ஆகிய இருவருமே தற்போது பொலீஸில சரணடைந்துள்ளனர் ஏனைய மூவரையும் பொலீஸார் தொடர்ந்து தேடிவருகின்றனர்.

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டுறவு பற்றி ஜனாதிபதி ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்கான முன்மொழிதல்கள் இனம் காணப்பட்டுள்ளதால் சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களையும் இதில்கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குமாறு செயலாளர் கேட்டுள்ளார்.

## விக்னா கல்வி நிறுவனம்

அளவையியல்

**திரு.சயந்தன்**

2002 12.00 a.m
2001 8.00 am } சனி, ஞாயிறு

வர்த்தகவியல்

**திரு.நந்தீஸ்**

2001 நுகர்வோர் பாதுகாப்பு (11.00)
2002 - 12.00 (sat,sun)

புவியியல்

**திரு.ஐங்கரன்**

2001 நில அளவையியல்
mon, thurs. 3.00

**A/L DAY CLASS**

ஆரம்பம் : 15.11.2k 8.am

(80287)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கை அதிபர் சேவையில் தரம் ஒன்றிற்கு பதவி உயர்வு பெற்றுள்ள எமது அதிபர்

**திரு. B.M. எட்வேட்** B.Sc.(Hons)Cey.

அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று நலமுடன் பல்லாண்டு காலம் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/சென்.ஜேம்ஸ்
மகாவித்தியாலயம்.

(80309)



## யாழ்ப்பாணம் ~ நீர்வேலி ~ மாசிவன்

## அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் கோயில்

### புனராவர்த்தன அஷ்டபந்தன

## மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(திருக்குடமுழுக்கு விழா)

இன்று (08.11.2000) காலை 9 மணி முதல் 10.45 மணி வரையுள்ள தனுலக்கின சுபவேளையில் பெரும் சாந்தி விழாவாகிய மகா கும்பாபிஷேகம் இடம்பெறும்.

அடியார்கள் யாவரும் தூய்மையோடு கும்பாபிஷேகத்திலும் அதன்பின் இடம்பெறும் கிரியைகளிலும் பங்குபற்றி மீனாட்சியின் திருவருள் பெற்று உய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

**- நிர்வாக சபையினர்.**

***நீர்வேலி மேற்கு.*** (C/13743)

உ



## திருமண அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருடம் ஐப்பசித் திங்கள் 24ஆம் நாள் நாளை (09.11.2000) வியாழக்கிழமை காலை 06.00 மணிமுதல் 11.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**கணேஸ்வரன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**சாந்திமதி** (சுகந்தி)
அவர்களுக்கும்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி (புதுக்கோயில்) ஆலயத்தில் திருமணம் செய்ய முருகன் திருவருள் கூடியிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும் ★

தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி
மு.சிவனையா (சிவம்)
(உதயன் பத்திரிகை நிறுவனம்)
கோயில் வீதி, கொக்குவில்.

திரு.திருமதி
சோ.சண்முகராஜா
3/1, ஸ்ரான்லி கல்லூரி லேன்,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி பா.புஷ்பராஜா
ஆனைக்கோட்டை

இரு வீட்டார் அழைப்பு

(C/13741)

## கண்ணீர் அஞ்சலி

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாண பணிப்பாளர்

**S.I.R. குரூஸ்**


அவர்களின் பாசமிகு தந்தையார் 04.11.2000 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங் களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆ.ஜெயபாலன்
வீதி பராமரிப்பு ஒப்பந்தகாரர்
(R.M.C)

(C/13745)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்
1938
-
10
-
14



விண்ணில்
2000
-
10
-
09

அமரர் **வல்லிபுரம் வேலாயுதபிள்ளை**

(முன்னாள் ஊழியர் - சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

மாதங்கள் பலவானாலும்
அணையாத எம் குலவிளக்கே !

09.10.2000 அன்று காலமான எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (08.11.2000) புதன்கிழமை நடைபெறும்.

மேற்படி நிகழ்விலும் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம் வடக்கு,
சுன்னாகம். (80307)

பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் ஜெயபாலசிங்கம் ஜெயபிரசாந்

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயபாலசிங்கம் ஜெயபிரசாந்த்கொ[..]ம்பில் அகால மரணமாகிவிட்டார். இவர் ஜெயபாலசிங்கம் - [..]ாபதி ஆகியோரின் ஏக புத்திரனும் நிரோஜாவின் அன்புத் தம்பி[..] பொன்னுத்துரை, கனகசபை ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் (08-11-2000) இன்று கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சோ.புவனேந்திரன்
(சிறிய தகப்பன்)

*புகையிரத நிலைய வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (80310)

## காசிப்பிள்ளை சடாட்சரம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட காசிப்பிள்ளை சடாட்சரம் நேற்று (07-11-2000) காலமானார்.

இவர் ஞானமணியின் அன்புக்கணவரும், புனிதரூபன், புவனேந்திரன்(மதுவரித் திணைக்களம்), ஸ்ரீரஞ்சினி(தேவி), தேவமனோகரி(சாந்தி-இத்தாலி),ஜோய் பூரணச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகமணி(கலா), இக்னேசியஸ் வாசவன்(இத்தாலி), ஜனதாஸ்(இத்தாலி), மேரி எலிசபெத்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மனோச் சோபஸ், வின்ஸ்சோ, அனிற்றாமேரி, யுனிற்றா, றொசானா, சாம் ஜெனிற்றன், சொரின் சாமந்தி, பிரசாந்தி, ஜெனிபர் (லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக அவரது இல்லத்திலிருந்து இன்று(08-11-2000) காலை 10 மணிக்கு பரி.கொஞ்சேந்தி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்மார்;
புனித றூபன், புவனேந்திரன்

*203/10 ஆசீர்வாதம் ஒழுங்கை*
*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (80312)

## அன்ரன் கொன்சன்ரைன் வலன்ரைன்

கரம்பன் மேற்கை பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அ.கொன்சன்ரைன் நேற்று (07-11-2000)செவ்வாய்க்கிழமை நீர் கொழும்பில் அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் பஸ்ரியாம்பிள்ளை வலன்ரைன் (பூராசா), யூலினா,(மணி), ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும் , அஜந்தா(ஆசிரியர் யா/ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி) , குயின்ரன் (SELVA Hardwares), விஜித்தா, (மாணவி யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), ஆகியோரின் அன்பு சகோதரனும் அருட்சகோதரி மரிய கொரற்றி (திருச்சிலுவை கன்னியர் மடம்) இன்பம், புஸ்பம், புனிதம், சுகி, ஜேம்ஸ், விக்ரர் ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற றீற்றா அந்தோனிப்பிள்ளை மற்றும் லீமா பீற்றர் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*57,பழையபூங்கா வீதி ,*
*யாழ்ப்பாணம்.*

*தற்போதைய முகவரி*
*83, சப்பல் வீதி*
*யாழ்ப்பாணம்.* (80315)

தகவல்:
யூலினா வலன்ரைன்
(தாயார்)

# ஆனந்தசங்கரி கண்டனம்

கொழும்பு,நவ.8

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தரநாயகத்தை யார் படுகொலை செய்திருந்தாலும் அது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக்கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினரும், சிரேஷ்ட உபதலைவருமான வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

துடிப்புமிக்கவர்; கட்சியின் முழுநேர தீவிரமான சேவையாளன்; அவரது படுகொலை கட்சிக்குப் பெரும் இழப்பாகும் - இப்படி அவர் மேலும் சொன்னார்.

இவரது கொலை தொடர்பாகத் துப்புத் தெரிந்தவர்கள் அவற்றைத் தெரிவித்துக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவுவதுடன் இத்தகைய படுகொலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-3)

## சந்தைக் குத்தகைக்காரர் கொலை

# முன்னாள் பிரதேச சபைத் தலைவர் உட்பட இருவர் நீதிமன்றில் சரண்

நெல்லியடி,நவ.8

நெல்லியடி சந்தை குத்தகைக்காரரின் கொலைச் சம்பவம் தொடர்பாக, நீதிமன்றில் சரணடைந்த கரவெட்டி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் உட்பட இருவரை இம்மாதம் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

கடந்த 25ஆம் திகதி இரவு கரவெட்டி தச்சன்தோப்புப் பகுதியில் வைத்து, சுட்டுக் கொல்லப்பட்ட கந்தப்பு தவராசா (வயது 35) என்பவரின் மரணம் சம்மந்தமாக, நெல்லியடி பொலீஸாரினால் சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்தவர்களான, கரவெட்டி பிரதேசச்சபை முன்னாள் தலைவர் செல்லையா சுந்தரமூர்த்தி (வயது 32), கரவெட்டி மத்தியைச் சேர்ந்த நாகராசா விமலநாதன் (வயது 17) ஆகிய இருவரும் சட்டத்தரணி பொன்.வெற்றிவேல் மூலம் கடந்த திங்களன்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் சரணடைந்தனர்.

வழக்கு விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிவான், குறித்த இரு சந்தேக நபர்களையும் இம்மாதம் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை - இக்கொலைச் சம்பவம் தொடர்பாக, இதே இடத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவரது மனைவியும் இனந்தெரியாத நபர்களினால் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருந்தார்.

# விமானப்படை உறுப்பினர் வீட்டில் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு!

## பாணந்துறையில் சம்பவம்

பாணந்துறை அலுபோமுல்ல பகுதியிலுள்ள விமானப்படைச் சிப்பாய் ஒருவரின் வீட்டில் இருந்து பெருந்தொகையான ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் பாணந்துறை பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

விமானப்படை தலைமையகத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பொலீஸார் அந்த விமானப் படைச்சிப்பாயின் வீட்டில் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர்.

இந்த சோதனையின் போது வீட்டிலிருந்து டெட்டனேட்டர்கள், டெட்டனேட்டருக்கான வயர்கள், கைக்குண்டுகள், ரீ.56 ரக துப்பாக்கி ரவைகள், பெருமளவு வெடிமருந்துகள் என்பவற்றை பொலீஸார் கைப்பற்றியதுடன் அவரையும் கைதுசெய்தனர். இந்த ஆயுதங்கள் எப்படி அந்த வீட்டுக்கு எடுத்து வரப்பட்டன, எதற்காக அவை அங்கு வைக்கப்பட்டிருந்தன என்பன தொடர்பாகப் பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜீ.ஜீயின் பிறந்ததின நிகழ்வுகள்

அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் முன்னாள் தலைவர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 101ஆவது பிறந்ததின நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்றன.

கோயில்களில் விசேட வழிபாடுகள் இடம்பெறுவதுடன் குருநகரில் அமைந்துள்ள அவரது சிலைக்கு மலரஞ்சலி இடம்பெறும். யாழ்.நகரிலும், வடமராட்சியிலும் அஞ்சலிக் கூட்டங்களும் இடம்பெறும். (இ-3)

## புலிகள் தரப்பில் உயிரிழந்த எண்மர் விவரம்

வவுனியா,நவ.8

கடந்த செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் தமது தரப்பில் உயிரிழந்த 8 உறுப்பினர்களின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் நேற்று வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

★ லெப்.புரட்சியரசி (சிவபாதசுந்தரம் நளாயினி - யாழ்ப்பாணம்)
★ முகுந்தா (நாகரத்தினம் கஜநிதி - யாழ்ப்பாணம்)
★ வெற்றிமகள் (சுப்பிரமணியம் ஸ்ரீவித்தியா - யாழ்ப்பாணம்)
★ 2ஆம் லெப்.தியாகமலர் (கணபதிப்பிள்ளை ரஞ்சினி - கிளிநொச்சி)
★ துரை (சுப்பிரமணியம் யோகேஸ்வரன் - மாங்குளம்)
★ 2ஆம் லெப்.விமல் (ஐயம்பிள்ளை விமலச்சந்திரன் - யாழ்ப்பாணம்)
★ கண்ணன் (சுப்பிரமணியம் சந்திரசேகரன் - யாழ்ப்பாணம்)
★ வசந்தன் (கதிர்காமத்தம்பி வசந்தகுமார் - ஐயன்குளம்) (இ-7)

எமது இன்றைய
பிரமிட் வீடியோ CD வெளியீடு
முதல் மரியாதை
மின்சார கனவு
வேதம் புதிது
மனதில் உறுதி வேண்டும்
ஒறிஜினல் வீடியோ CD வெளியீடு
★ பிரியமானவளே
★ தெனாலி
★ வானவில்
★ புதிய ஒலி ஒளி
ITN
வீடியோ மூவீஸ்
27,கோயில் வீதி,
கொக்குவில்.
(80313)

நாளை ஆரம்பமா?
ஆம்
கலை, வர்த்தகம்
A/L 2001
DAY CLASS
10.00 a.m.
BEACON
வெலிங்டன் சந்தி அருகில்
(80184)

இன்றைய
வீடியோ CD வெளியீடு
சீனு
(பிரதிகளை உடன் பெற்றுக் கொள்ளலாம்)
மூர்த்தி வீடியோ
மானிப்பாய்
(C/13746)

சித்தி விநாயகர்
கல்வி நிறுவனம்
K.K.S. வீதி, மல்லாகம்.
A/L DAY CLASSES
ஆரம்பம்:- 10.11.2K
தரமான ஆசிரியர் குழு
(C/13737)

# பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பு!

பேராதனை,நவ.8

"ராகிங்" கொடூரத்தில் ஈடுபட்டமைக்காக மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று பல்கலைக்கழக வளாகத்தில் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

ராகிங் கொடூரத்தில் ஈடுபட்டமை, பெண் விரிவுரையாளர் மீது சேஷ்டை புரிந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் மேற்படி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 49 மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் கடந்தவாரம் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

இடைநிறுத்தப்பட்ட மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிவித்தே ஏனைய மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் பேச்சு நடத்தினர் எனவும் -

பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படாததை அடுத்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

, இடைநிறுத்தம் செய்யப்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக கற்கை நெறிகளுக்கு அனுமதிக்கப்படாவிட்டால் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப்போவதாகவும் மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்திலுள்ள பெண்கள் மலசல கூடத்தினுள் டிஜிட்டல் கமெரா ஒன்றைப் பொருத்தியதாகக் கூறப்படும் விரிவுரையாளரை பல்கலைக் கழகத்தை விட்டு நீக்கும்படி கோரி பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றை நடத்தி இருந்தனர். (இ-7-8)

## நாடாளுமன்றில் சமர்ப்பிப்பது பற்றி முடிவில்லை

# புதிய அரசமைப்புக் குறித்து ஆராய கால அவகாசம் தேவை

## ஐ.தே.கவுடனான பேச்சு குறித்து பிரதமர் பேட்டி

கொழும்பு,நவ.8

புதிய அரசமைப்பை மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது குறித்து தெளிவான முடிவொன்றை அரசாங்கம் இதுவரை எடுக்கவில்லை. அது தொடர்பாக வேறுபட்ட கருத்துக்கள் பல தெரிவிக்கப்படுகின்றன. இவை குறித்து ஆராய அரசாங்கத்துக்கு கால அவகாசம் தேவை.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்றத்தில் நாம் முன்னர் சமர்ப்பித்த புதிய அரசமைப்புச் சட்டநகல் வாபஸ்பெறப்பட்டுவிட்டது. அந்த அரசமைப்புத் தொடர்பாக ஈ.பி.டி.பி உட்பட சில தமிழ்க் கட்சிகள் புதிய யோசனைகளை முன்வைத்துள்ளன.

1978ஆம் ஆண்டு அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு மேலும புதிய திருத்தங்களை சேர்த்து அதனூடாக தீர்வு யோசனை ஒன்றை முன்வைக்க தமிழ்க்கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. அதற்கு ஐ.தே.கவின் ஆதரவு கிடைக்கும் என்றும் அவை நம்புகின்றன. எனவே சகல தரப்பின் ஆதரவும் கிடைக்குமானால் அந்த யோசனை குறித்து ஆராய்வோம்.

இதேவேளை - அரசாங்கம் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும்; புலிகளுடன் நோர்வே தூதுக்குழுவினர் மேற்கொண்ட பேச்சுக்கள் குறித்து நான் அறிந்திருக்கவில்லை. பேச்சு நடத்தி பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க முடியாது. புலிகள் ஜனநாயக வழிக்கு வருவார்களானால் மட்டுமே பேச்சுவார்த்தை மூலம் பயன் ஏற்படும்.

எனக்கும் ஐ.தே.கட்சி எம்.பியான டிரோனுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்கள் குறித்து பல்வேறு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அந்தப் பேச்சுக்களின் போதே ஐ.தே.கவின் போசனைகள் அடங்கிய பிரதி என்னிடம் கையளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் நான் ஜனாதிபதியுடன் பேசினேன். அதன் பின் மேலும் பல விடயங்களை உள்ளடக்கிய பல யோசனைகளை ஐ.தே.கட்சி வெளியிட்டது.ஆனால் நானும் டிரோனும் நான்கு ஆணைக்குழுக்கள் அமைத்தல், பயங்கரவாதத்தை ஒழிக்க ஒத்துழைப்புடன் செயற்படுதல் ஆகிய முக்கிய பிரச்சினைகளில் எவ்வாறு ஒன்றுபட்டு செயற்படுவது என்பது குறித்தே ஆராய்ந்தோம்.

இரண்டு ஆண்டுகளுக்கு அரசாங்கத்துக்கு தடங்கல் ஏற்படுத்தாமல் ஒத்துழைப்பதாகவும் ஐ.தே.க. இணங்கியது.

ஐ.தே.கவின் யோசனைகளை டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன் செயற்படுத்த வேண்டும் என காலக்கெடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் மேற்படி 4 ஆணைக்குழுக்கள் தொடர்பாக தேசிய ஐக்கிய முன்னணித் தலைவரும் அமைசருமான ரவூப் ஹக்கீமும் அரசுக்கு யோசனை தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் அதிகமான அமைசர்கள் இணைக்கப்பட்டதற்குக் காரணம் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு ஆகும். அதிகமான அமைச்சர்களுக்கு ஒரு விவகாரம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

பணம் கூடுதலாக செலவானாலும் உண்மையான அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும் - என்று அப்பேட்டியில் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## கூட்டணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

சந்திவெளி இராணுவ முகாமுக்கும் கிரான் இராணுவ முகாமுக்கும் இடைப்பட்ட கிரான் சந்தியில் இச்சம்பவம் நடைபெற்றதாகச் சுயேச்சையான தகவல்கள் தெரிவித்தன.

துப்பாக்கிச் சூட்டினால் பலத்த காயமுற்ற நாடாளுமன்ற உறுப்பினர் நிமலன் ஏறாவூர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டவேளை வழியில் அவரது உயிர் பிரிந்தது.

ஏறாவூர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட சடலம் அங்கு முதலில் வைக்கப்பட்டு, மரணவிசாரணைக்காக மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு நேற்று இரவு எடுத்துச்செல்லப்பட்டது. மரணவிசாரணை இன்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நிமலனின் மார்புப் பகுதியில் சரமாரியாகச் சுடப்பட்டதற்கான காயங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவருடன் கூடச்சென்ற எஸ். ஜெயானந்தம் காயமுற்று மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அதிபரான நிமலன் சௌந்தரநாயகம் 1994 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் போட்டியிட்டார்.

கடந்த ஒக்ரோபர் 10 ஆம் திகதி நடைபெற்ற பதினோராவது பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராகவும் போட்டியிட்டார். (அ-21-3)

# நிமலராஜன் கொலையை கண்டித்து காலியில் ஆர்ப்பாட்டம்

காலி,நவ.8

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து கடந்த 3ஆம் திகதி காலி மத்திய பஸ் நிலையம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்த மறியல் போராட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

காலி மாவட்ட வெகுஜன தொடர்பாளர் அமைப்பு இந்த மறியல் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் 'கொலைகாரனைக் கண்டுபிடி', 'குற்றவாளியைக் கண்டுபிடித்து நீதிமன்றத்தின் முன் நிறுத்து', 'ஊடகத்துறையினரை சுதந்திரமாக நடமாடவிடு' ஆகிய கோஷங்களை எழுப்பினர். (இ-8)

## இன்னும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்களை நீக்குமுகமாக, கடந்த ஏழு மாதங்களுக்கு மேலாக நிறுத்தப்பட்டிருந்த விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் முடிவு செய்ததாக பிரிகேடியர் சனத் கருணாரத்னா சொன்னார்.

யாழ்ப்பாணத்துக்கான விமான சேவையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக விமானப்படை அதிகாரிகள் அடங்கிய விசேட குழு நேற்றுமுன்தினம் இங்கு வந்திருந்தது.

இதேவேளை, வெளிநாட்டில் இருந்து வாடகைக்கு அமர்த்தப்படும் விமானங்கள் இரண்டும் நாளாந்தம் சேவையில் ஈடுபடும் என்று விமானப்படையின் உயர் அதிகாரியான விங் கொமாண்டர் அஜித் டி சில்வா தெரிவித்துள்ளார். (அ)

## ஈரோஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லுக்கு அணையில் மறைந்து நின்ற சிலர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

கழுத்திலும் நெஞ்சிலும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இவர் சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே உயிரிழந்துவிட்டார் எனவும் கூறப்பட்டது.

இவரது சடலம் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-7-21)

## கண்ணீர் காணிக்கை

எமது சக ஊழியர் திரு.ப.குலானந்தன்
அவர்களின் அன்பு துணைவி
**திருமதி யோகேஸ்வரி குலானந்தன்**
அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கும் ஏனையோருக்கும் எமது உள நெகிழ்வுகளை காணிக்கையாக்குவதுடன் அவரது ஆத்மா சாந்தி யடைய பிரார்த்திக்கின்றோம்.

வட பிராந்திய போக்குவரத்துச்சபை
யாழ்.சாலை நிர்வாகிகள்,
ஊழியர்கள்.

(80316)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.